## ரூ.218.20 கோடி செலவில்

# மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

மதுரை, ஜூலை 16-

மதுரையில் ரூ.218.20 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.7.2023) மதுரை புதுநத்தம் சாலையில் 2.73 ஏக்கர் நிலத்தில் 2,13,338 சதுர அடி பரப்பளவில், தரை மற்றும் 6 தளங்களுடன் 218 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை திறந்து வைத்தார்.

எழுத்தாளர், கவிஞர், நாடக ஆசிரியர், பத்திரிகையாளர், படைப்பாளி, அரசியல், ஆட்சி என எத்துறையைத் தொட்டாலும், அத்துறையில் முத்திரை பதித்த மாபெரும் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெருமையைப் போற்றும் விதமாக, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 3.6.2021 அன்று வெளியிட்ட அறிவிப்பில், ‘புத்தகங்கள் மீதும், புத்தகங்களை வாசிப்பதின் மீதும் வாழ்நாள் முழுவதும் தீராப் பற்றினை கொண்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 2010ஆம் ஆண்டில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 102வது பிறந்தநாள் அன்று சென்னை, கோட்டூர்புரத்தில், ஆசியாவின் அதிநவீன மிகப் பெரிய நூலகமான அண்ணா நூற்றாண்டு நூலகத்தை திறந்து வைத்தார். சமுதாயத்தின் அனைத்து பிரிவினருக்கும் அறிவொளி அளிக்கும் கலங்கரை விளக்கமாக இந்த நூலகம் விளங்கி வருகிறது. தமிழ்நாட்டின் மற்ற பகுதிகளில் வாழும் மக்களும், இத்தகைய அரிய வாய்ப்பினைப் பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு, சங்கத்தமிழ் வளர்த்த மதுரையில், முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நூலகம் இரண்டு இலட்சம் சதுரஅடி பரப்பளவில் நவீன வசதிகளுடன் அமைக்கப்படும்’ என்று அறிவித்திருந்தார்.

அந்த அறிவிப்பினை செயல்படுத்திடும் வகையில், மதுரை புதுநத்தம் சாலையில் அமைந்துள்ள பொதுப்பணித் துறை வளாகத்தில் கலைஞர் நூற்றாண்டு நூலகம் கட்டும் பணிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 11.1.2022 அன்று அடிக்கல் நாட்டினார்.

இவ்வரலாற்று சிறப்புமிக்க கலைஞர் நூற்றாண்டு நூலகத்தின் கட்டுமானப் பணிகள் 17 மாதங்களில் முடிவுற்று, அனைவருக்கும் அறிவொளி அளிக்கும் கலங்கரை விளக்கமாக மதுரையில் தரைத்தளம் மற்றும் 6 தளங்களுடன் கட்டப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு நூலகம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்றைய தினம் திறந்து வைக்கப்பட்டது.



கலைஞர் நூற்றாண்டு நூலகத்தின் கட்டுமானப் பணிகள் 120 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவிலும், 60 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான நூல்கள், 5 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள், 37 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான அறைகலன்கள், திறந்தவெளி அரங்கம் மற்றும் கூடுதல் வசதிகள், என மொத்தம் 218 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் இந்நூலகம் அமைக்கப்பட்டுள்ளது.

### கலைஞர் நூற்றாண்டு நூலகத்தின் தளம் வாரியான விவரங்கள்

கலைஞர் நூற்றாண்டு நூலகத்தின் அடித்தளத்தில் நான்கு சக்கர வாகன நிறுத்துமிடம், தரைமட்ட தண்ணீர் தொட்டி, செய்தி / நாளிதழ் சேமிப்பு அறை, நூல் தொகுக்கும் பிரிவும், தரைத்தளத்தில் கலைக்கூடம், மாற்றுத் திறனாளிகளுக்கான பிரிவு, மாநாட்டுக் கூடம், முக்கிய பிரமுகர்கள் அறை, சொந்த நூல்கள் வாசிப்புப் பிரிவு, பல்வகைப் பயன்பாட்டு அரங்கம், உறுப்பினர் சேர்க்கை பிரிவு, கணினி கட்டுப்பாட்டு அறை, தபால் பிரிவும், முதல் தளத்தில் கலைஞர் பிரிவு, பருவ இதழ்கள் மற்றும் நாளிதழ்கள் பிரிவு, குழந்தைகள்திரை அரங்கம், குழந்தைகளுக்கான நூலகப் பிரிவு, சொந்த நூல்கள் வாசிப்புப் பிரிவு, சிறார் அறிவியல் பூங்கா, அறிவியல் உபகரணங்கள் பிரிவும், இரண்டாம் தளத்தில் தமிழ் நூல்கள் பிரிவும், மூன்றாம் தளத்தில் தமிழ் நூல்கள் பிரிவு, ஆங்கில நூல்கள் பிரிவு, ஆராய்ச்சி பதிப்புகள் மற்றும் இதழ்கள் பிரிவும், நான்காம் தளத்தில் போட்டித் தேர்வுப் பிரிவு, கூரைத் தோட்டமும், ஐந்தாம் தளத்தில் அரிய நூல்கள் பிரிவு, மின் நூலகம், பல்லூடகப்பிரிவு, நூல்கள் பாதுகாக்கும் பிரிவு, ஒளிஒலி தொகுப்புகள் காட்சியகப் பிரிவு, மின்னுருவாக்கப் பிரிவு, நூலக ஸ்டுடியோ, நுண்படச்சுருள், நுண்பட அட்டை அறை ஆகியவையும், ஆறாம் தளத்தில் ஆங்கில நூல்கள் பிரிவு, நூல் பகுப்பாய்வு மற்றும் நூற்பட்டி தயாரித்தல் பிரிவு, தலைமை நூலகர் அலுவலகம் மற்றும் நிர்வாகப் பிரிவு, நூல்கள் கொள்முதல் பிரிவு, பணியாளர் உணவருந்தும் அறை ஆகியவையும் அமைந்துள்ளன.

இந்நூலகத்தில், தரைத்தளம் முதல் இரண்டாம் தளம் வரை தானியங்கி நகரும் மின் படிக்கட்டு (எஸ்கலேட்டர்) வசதி, மின்தூக்கிகள் வசதி, ஒருங்கிணைந்த குளிரூட்டு வசதி, வாசகர்களுக்கான இணைய வசதி

(வை ஃபை), படிக்கும் வசதியுடன் கூடிய திறந்தவெளி மாடித் தோட்டம் ஆகிய வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

### தளம் வாரியாக உள்ள நூல்களின் விவரங்கள்

கலைஞர் நூற்றாண்டு நூலகத்தின் தரைத்தளத்தில் தமிழ்நாடு பாடநூல்கள், போட்டித் தேர்விற்கான நூல்கள் ஆகியவை பார்வையற்றோர் எளிதாக பயிலும் வகையில் பிரெயில் எழுத்துகளிலான 1800 நூல்கள் இடம்பெற்றுள்ளது. முதல் தளத்தில் உள்ள குழந்தைகள் பிரிவில், இந்திய மற்றும் சர்வதேச அளவில் பதிப்பிக்கப்பட்ட அனைத்து வகையிலான 30,000 குழந்தைகள் நூல்கள் தொகுத்து வைக்கப்பட்டுள்ளன. இரண்டாம் தளத்தில் உள்ள தமிழ் நூல்கள் பிரிவில், தமிழ் இலக்கியங்கள், இலக்கண நூல்கள், நாவல்கள், கவிதைகள், சிறுகதைகள், நாடகங்கள், கட்டுரைகள், கடிதங்கள், சுயசரிதை நூல்கள் மற்றும் கணினி அறிவியல், இதழியல், உளவியல், மெய்யியல், மானுடவியல், சட்டம், பொருளாதாரம், தமிழ் பண்பாடு, பண்பாடு, கலாச்சாரம், தமிழில் தொண்மை, தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட நூல்கள், அறிவியல், தொழில்நுட்பம், வரலாறு மற்றும் புவியியல் போன்ற அனைத்து பாடப்பிரிவுகளில் வெளிவந்த 1,00,000 தமிழ் நூல்கள் இடம்பெற்றுள்ளன. மூன்றாம் தளத்தில் உள்ள ஆங்கில நூல்கள் பிரிவில் கணிபொறியியல், தத்துவம், சமயம், சமூக அறிவியல், பொருளாதாரம், சட்டம், அறிவியல் தொழில் நுட்பம், நானோ தொழில் நுட்பம், ரோபோடிக்ஸ், Artificial Intelligence, Space Technology, பொறியியல், வானியல், கலை, நுண்கலை, விளையாட்டு, சினிமா, வேளாண்மை, உணவு, வரலாறு, புவியியல், உட்பட அனைத்து பாடங்களிலும் பதிப்பிக்கப்பட்ட தேசிய மற்றும் சர்வதேச அளவில் புகழ்பெற்ற பதிப்பாளர்களின் 1,00,000 நூல்கள் இப்பிரிவில் இடம்பெற்றுள்ளன. நான்காம் தளத்தில் உள்ள போட்டித்தேர்வு நூல்கள் பிரிவில் TNPSC, TRB, UPSC, Banking என அனைத்து வகையான போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் இளைஞர்கள் பயன்படுத்தும் வகையில், இப்பிரிவில் போட்டித் தேர்வு நூல்கள் 30,000 இடம்பெற்றுள்ளன. மேலும், ஆங்கில குறிப்புதவி நூல்கள் பிரிவில் கணிபொறியியல், தத்துவம், சமயம், சமூக அறிவியல், பொருளாதாரம், சட்டம், அறிவியல் பாடங்கள் சார்ந்த 50,000 ஆங்கில குறிப்புதவி நூல்கள் இடம்பெற்றுள்ளன. ஆறாம் தளத்தில் உள்ள ஆங்கில குறிப்புதவி நூல்கள் பிரிவில் அறிவியல், தொழில் நுட்பம், வரலாறு மற்றும் புவியியல் போன்ற அனைத்து பாடப்பிரிவுகளில் 60,000 ஆங்கில குறிப்புதவி நூல்கள் இடம்பெற்றுள்ளன. மேலும் அரிய நூல்கள் பிரிவில் தமிழ் மொழி, தமிழ் கலாச்சாரம், தமிழ் வரலாறு மற்றும் மானுடவியல் பற்றிய 16,000 அரிய நூல்கள், ஆவணங்கள், கையெழுத்துப் பிரதிகள் போன்றவை இடம் பெற்றுள்ளன.

இவ்விழாவில், எச்.சி.எல். குழுமத்தின் நிறுவனர் ஷிவ் நாடார், தலைவர் திருமதி ரோஷினி நாடார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

இவ்விழாவில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, அமைச்சர் பெருமக்கள், மாண்பமை நீதியரசர்கள், மதுரை மாநகராட்சி மேயர் திருமதி வி.இந்திராணி பொன்வசந்த், நாடாளுமன்ற உறுப்பினர் சு. வெங்கடேசன், சட்டமன்ற உறுப்பினர் கோ. தளபதி, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர் டி.நாகராஜன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தரமோகன், பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, பொது நூலகங்கள் இயக்குநர் கே. இளம்பகவத், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி எம்.எஸ். சங்கீதா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





காஞ்சிபுரம் மாநகரம் 2 ஆம் பகுதி கழகம் 30 வது வட்டத்தில் மாவட்ட பிரதிநிதியும் பணிக்குழு தலைவருமான சுரேஷ் ஏற்பாட்டில் 5 லட்சம் மதிப்பில் தையல் மிஷின், புடவை, குளிர்சாதன பெட்டி உள்ளிட்ட பல்வேறு நல திட்டங்களை மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன், மாநகர செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன், காஞ்சிபுரம் மேயர் திருமதி. மகாலட்சுமி யுவராஜ், சன் பிராண்ட் ஆறுமுகம், அ.யுவராஜ், பகுதி செயலாளகள் எஸ்.சந்துரு, கே. திலகர், அ.தசரதன், சு.வெங்கடேசன் உள்ளிட்ட மாநகர நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் 100 - ஜெ.அன்பழகன் 3-ஆம் ஆண்டு நினைவஞ்சலியை முன்னிட்டு

## தியாகராயர் நகர் 141 (அ) வட்டத்தில் மாணவர்களுக்கு நோட்டுபுத்தகம்!

### எஸ்.இராமலிங்கம் தலைமையில் ராஜா அன்பழகன் வழங்கினார்!

சென்னை, ஜூலை 16-

சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராய நகர் கிழக்கு பகுதி 141 (அ) வட்டத்தில் கலைஞர் 100 மற்றும் தீரர் ஜெ.அன்பழகன் அவர்களின் 3ஆம் ஆண்டு நினைவு அஞ்சலியை முன்னிட்டு மாவட்ட பிரதிநிதி எஸ். இராமலிங்கம் தலைமையில் சி.ஐ.டி நகர் சென்னை மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட இளைஞர் அமைப்பாளரும்,

141-வது வட்ட மாமன்ற உறுப்பினர் ராஜா அன்பழகன் எம்.சி. அனைத்து மாணவ மாணவிகளுக்கு நோட்டு புத்தகம் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் ஜெ.ஜானகிராமன், தி.நகர் வாசுதேவன், சாந்தி பங்காரு, நூர் அகமது, எஸ்.இளங்கோவன், சி.பால்தேவ், இரா. முகுந்தன், எஸ்.ஈஸ்வரன், எம்.சுதாதுரை, தங்கம் சரிதா, பி.ஜி. நந்தகுமார், எம்.வெற்றிவேல்,

ஆர்.கணேசன், ஆர். பாலாஜி, கே.துரை, என். முனீர் அலி, எம்.எஸ். லோகு, ஜி.கே.பத்தா, லாரி குமார், டி. வெங்கடேசன், ஆர்.கிருஷ்ணமூர்த்தி, எம். மூர்த்தி,

எஸ்.பாபு, வேலு, எஸ். ஆர். விவேகானந்தன், ஜெ.புல்லிவெங்கடேசன், எஸ்.புண்ணிய கோட்டி, பா.கண்ணன், எச்.கறீம், எஸ்.சுந்தரம், என்.பெருமாள், பி.என்.சின்னதுரை, அய்யாலு,

தி.நகர் இ.சக்தி, ஜி.ரவி, மெக்கானிக் ராஜா, கே. சந்தோஷ், ஏ.பாலா, எலிசபத் கண்மணி மற்றும் கழக தோழர்கள் கலந்துக்கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

## சில வரிச் செய்திகள்

### கனமழை:

## மீண்டு வரும் இமாசலப் பிரதேசம்!

சிம்லா, ஜூலை 16-

ஹிமாசலில் கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கித் தவித்த 70,000 சுற்றுலாப் பயணிகள் வெளியேற்றப்பட்டுள்ளனர் என்று அம்மாநில முதல்வர் சுக்விந்தர் சிங் சுகு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது, மாநிலத்தில் கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி தவித்தவர்களை வெளியேற்றும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன. சுமார் 70,000 சுற்றுலாப் பயணிகள் வெளியேற்றப்பட்டுள்ளனர். சுமார் 500 சுற்றுலாப் பயணிகள் தாமாக முன்வந்து மாநிலத்தில் தங்குவதற்கு முடிவு செய்துள்ளனர்.

மாநிலத்தில் இருந்து சுமார் 15,000 வாகனங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இதனுடன், பேரிடர் பாதித்த 80 சதவீத பகுதிகளில் மின்சாரம், தண்ணீர் மற்றும் மொபைல் சேவைகள் தற்காலிகமாக சீரமைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பகுதிகளில் அத்தியாவசிய சேவைகளை விரைவாக மீட்டெடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

---------

### ஒன்றிய அரசின் அலட்சியம்:

## சிவிங்கிப் புலிகள் பரிதாப பலி!

போபால், ஜூலை 16-

குனோ பூங்காவில் இருந்து சிவிங்கிப் புலிகள் இடமாற்றம் செய்யப்படாது என்று மத்திய தொழிலாளர் நலன், வனம், சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாற்றத் துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் அழிந்துபோன இனமான சிவிங்கிப்புலிகளை மீண்டும் அறிமுகப்படுத்தும் மத்திய அரசின் லட்சியத் திட்டத்தின்கீழ், நமீபியாவில் இருந்து 8 சிவிங்கிப் புலிகளும் (5 பெண், 3 ஆண்), தென்னாப்பிரிக்காவில் இருந்து 12 சிவிங்கிப் புலிகளும் (7 ஆண், 5 பெண்) கொண்டுவரப்பட்டு, குனோ தேசியப் பூங்காவில் விடப்பட்டன. இதில், ‘சாஷா’ எனும் பெண் சிவிங்கிப் புலி சிறுநீரகத் தொற்றால் பாதிக்கப்பட்டு, கடந்த மார்ச் மாதம் உயிரிழந்தது.

பின்னர், ‘உதய்’ எனும் ஆண் சிவிங்கிப் புலி கடந்த ஏப்ரல் மாதமும், ‘தக்ஷா’ என்ற பெண் சிவிங்கிப் புலி கடந்த மே மாதமும் இறந்தன. இதனிடையே, ஜ்வாலா என்ற பெண் சிவிங்கிப் புலி, குனோ பூங்காவில் ஈன்றிருந்த 4 குட்டிகளில், 3 குட்டிகள் அடுத்தடுத்து உயிரிழந்தன. கடந்த செவ்வாய்க்கிழமை, தேஜஸ் என்ற 4 வயது ஆண் சிவிங்கிப் புலி, தனது வாழ்விடத்தில் இறந்தது.

இதனிடையே தென்னாப்பிரிக்காவில் இருந்து கொண்டுவரப்பட்ட சுராஜ் என்ற ஆண் சிவிங்கிப் புலி வெள்ளிக்கிழமை உயிரிழந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர். வேலியிடப்பட்ட வாழ்விடத்தில் இருந்து, வனத்துக்குள் விடப்பட்டிருந்த இந்த சிவிங்கிப் புலியின் உடலில் காயங்கள் காணப்படுகின்றன. அதன் இறப்புக்கான காரணம் ஆராயப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். ஆளும் பாஜகவின் தவறான நிர்வாகம் காரணமாகவே சிவிங்கிப் புலிகள் உயிரிழப்பதாக எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சித்து வருகின்றன.

-----------

### உலக விஞ்ஞானிகளில்

## 2 சதவீதம் பேர் இந்தியர்கள்!

கோவை, ஜூலை 16-

பல்வேறு நோய்களுக்கு ஒரே தடுப்பூசியை கண்டுபிடிக்கும் முயற்சியில் இந்திய விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளதாக டிஆர்டிஓ முன்னாள் தலைமை கட்டுப்பாட்டு அதிகாரி செல்வமூர்த்தி தெரிவித்துள்ளார்.

கோவையில் உள்ள தனியார் கல்லூரியில் அறிவியல் துறையில் சமீபத்திய புதிய கண்டுபிடிப்புகள் குறித்த சர்வதேச கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக மத்திய அரசின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் துறையின் முன்னாள் விஞ்ஞானி செல்வமூர்த்தி கலந்து கொண்டார்.

அப்போது பேசிய அவர், உலக அளவில் முன்னிலையில் உள்ள விஞ்ஞானிகளில் 2 சதவீதம் பேர் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என சுட்டிக்காட்டினார். அத்துடன், நமது நாடு புதிய கண்டுபிடிப்புகளின் தொட்டிலாகவும், புதிய வகை தடுப்பூசிகளை கண்டுபிடிக்கும் மையமாகவும் திகழ்வதாக கூறினார்.

மேலும், பல்வேறு நோய்களுக்கு ஒரே தடுப்பூசியை கண்டுபிடிக்கும் முயற்சியில் இந்திய விஞ்ஞானிகள் ஈடுபட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

-----------

### மேற்கிந்திய தீவு டெஸ்ட் தொடர்

## இந்திய அணி அபார வெற்றி!

டொமினிகா, ஜூலை16 -

வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இந்தியா இன்னிங்ஸ் மற்றும் 141 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. மேற்கு இந்திய தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. டொமினிகாவில் உள்ள விண்ட்சர் பார்க் மைதானத்தில் நடந்து வரும் முதல் டெஸ்ட் போட்டியில், டாஸ் வென்று பேட் செய்த வெஸ்ட் இண்டீஸ் முதல் இன்னிங்சில் 150 ரன்னுக்கு சுருண்டது. அஷ்வின் 5, ஜடேஜா 3, சிராஜ், ஷர்துல் தலா 1 விக்கெட் வீழ்த்தினர். இந்திய தரப்பில் அறிமுக வீரர் ஜெய்ஸ்வால் 171 ரன்களும் ரோகித் ஷர்மா 103 ரன்களும் விளாசினர்.

விராட் கோஹ்லி தனது பங்கிற்கு 76 ரன்கள் அடித்தார். இந்திய அணி 5 விக்கெட் இழப்பிற்கு 421 ரன்கள் எடுத்து டிக்ளேர் செய்தது. இதையடுத்து களமிறங்கிய வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு தொடக்கம் சிறப்பாக அமையவில்லை. ஆடுகளம் சூழலுக்கு ஒத்துழைத்ததால் அஷ்வின், ஜடேஜா இருவரும் பேட்டர்களை திணறடித்தனர். சீரான இடைவெளியில் விக்கெட்டுகளை இழந்த அந்த அணி 130 ரன்களில் சுருண்டது. இந்திய அணி சார்பில் வெகு சிறப்பாக பந்துவீசிய அஷ்வின் இரண்டாவது இன்னிங்ஸில் 7 விக்கெட் வீழ்த்தி அசத்தினார். அவர் முதல் இன்னிங்சில் 5 விக்கெட் எடுத்து இருந்தார். ஜடேஜா 2 விக்கெட்களையும் சிராஜ் 1 விக்கெட்டும் வீழ்த்தி இருந்தார்.